தூத்துக்குடியில் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்த போது

விஷவாயு தாக்கிய சம்பவத்தில் மேலும் ஒருவர் சாவு

பலி எண்ணிக்கை 3 ஆக உயர்வு

தூத்துக்குடி, ஆக. 8–

தூத்துக்குடி தாளமுத்துநகர் நேரு காலனி ஆனந்தநகரை சேர்ந்தவர் கணேசன் (வயது 60). இவரது வீட்டில் உறைகிணறு உள்ளது. இதன் அருகில் கழிவு நீர் தொட்டி உள்ளது. இந்த தொட்டியில் இருந்து தண்ணீர் கசிந்து உறைகிணற்றுக்குள் இறங்கியது. இதனால் உறைகிணற்று தண்ணீர் மிகுந்த துர்நாற்றம் வீசியதால் அதனை பயன்படுத்த முடியாத நிலை இருந்தது.

இதைத்தொடர்ந்து கடந்த 4–ந்தேதி உறைகிணற்றில் உள்ள தண்ணீரை வெளியேற்றி, அதனை சுத்தம் செய்து சீரமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த பணியில் ஆறுமுகநேரியைச் சேர்ந்த மாரிமுத்து (36) என்ற தொழிலாளி ஈடுபட்டார். அவருடன் வீட்டு உரிமையாளரான கணேசனும் வேலை செய்தார்.

அப்போது உறைகிணற்றில் இருந்த தண்ணீரை மோட்டார் மூலம் உறிஞ்சி வெளியேற்றும் போது உறைகிணற்றுக்குள் வாளி தவறி விழுந்துள்ளது. அதனை எடுக்க கணேசன் கயிறு கட்டி உறைகிணற்றுக்குள் இறங்கினார். நீண்ட நேரமாகியும் அவர் வெளியே வராததால் மாரிமுத்துவும் உறைகிணற்றில் இறங்கினார்.

அவரும் நீண்ட நேரமாகியும் வெளியே வரவில்லை. இதனால் அப்பகுதியை சேர்ந்த பவித்ரன் (32), ஜேசுராஜன் ஆகியோர் உறைகிணற்றில் இறங்கினர். அப்போது, அவர்களுக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் சத்தம் போட்டனர். தகவலறிந்ததும் தூத்துக்குடி தீயணைப்பு வீரர்கள் மற்றும் போலீசார் விரைந்து சென்று உடனடியாக அவர்கள் 2 பேரையும் மீட்டு சிகிசசைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் உறைகிணற்றுக்குள் விஷவாயு பரவி இருந்ததால் கணேசன், மாரிமுத்து ஆகிய 2 பேரும் மூச்சுத்திணறி இறந்தனர்.

இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையே காயமடைந்த 2 பேருக்கும் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று ஜேசுராஜன் பரிதாபமாக உயிரிழந்தார். இதனால் பலி எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை இன்று முகாம் அலுவலகத்தில், நெல்லை மாநகராட்சி மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராமகிருஷ்ணன் சந்தித்து வாழ்த்து பெற்றார். அருகில் அமைச்சர்கள் கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் மைதீன்கான், அப்துல் வகாப் எம்.எல்.ஏ., துணை மேயர் கே.ஆர்.ராஜூ உள்ளனர்.

பாராளுமன்றத்தில் வக்பு வாரிய ... (3-ம் பக்க தொடர்ச்சி)

காங்கிரஸ் உள்பட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளன. வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை பாராளுமன்ற நிலைக்குழு பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆனால் அதை மத்திய அரசு ஏற்கவில்லை. இதையடுத்து பாராளுமன்றத்தில் வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை அறிமுகப்படுத்த எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் சார்பில் சபா நாயகரிடம் இன்று நோட்டீஸ் வழங்கப்பட்டது.

சட்ட விரோதம்

காங்கிரஸ் எம்.பி.க்கள் வேணுகோபால், ஹிபி ஈடன் ஆகியோர் கொடுத்து உள்ள நோட்டீசில், "சொத்து உரிமை தொடர்பான சட்டத்தை திருத்துவது சட்ட விரோதம்" என்று குறிப்பிட்டுள்ளனர். மேலும் சட்டப்பிரிவு 25–ன்படி அடிப்படை உரிமையை இது பறிப்பதாக இருப்பதாகவும் காங்கிரஸ் எம்.பி.க்கள் குறிப்பிட்டு உள்ளனர். மேலும் இந்த சட்டத்திருத்த மசோதா மூலம் மாநில அரசு உரிமை பறிக்கப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

அகிலேஷ் பாய்ச்சல்

சமாஜ்வாடி கட்சி தலைவர் அகிலேஷ்யாதவ் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில், "காவி கட்சி ரியல் எஸ்டேட் கம்பெனி போல செயல்பட தொடங்கி விட்டது. பாஜனதா என்பதை பாரதீய ஜமீன் கட்சி என்று சொல்லும் அளவுக்கு அது மாறி விட்டது. இஸ்லாமியர்களின் உரிமையை பறிக்கும் சட்டத்திருத்த மசோதாவை தொடக்கத்திலேயே நாங்கள் எதிர்க்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் இன்று இது தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி இந்தியா கூட்டணியில் உள்ள மற்ற கட்சி தலைவர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். அப்போது வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை தொடக்கத்திலேயே எதிர்க்க முடிவு செய்யப்பட்டது.

1 மணிக்கு தாக்கல்

எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தாலும் வக்பு வாரிய சட்டத்திருத்தத்தை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய மத்திய அரசு உறுதியாக இருந்தது. மதியம் 1 மணிக்கு பாராளுமன்றம் கூடியதும் இந்த சட்டத்திருத்த மசோதாவை சிறுபான்மை விவகாரத்துறை மத்திய மந்திரி கிரன்ரிஜ்ஜூ தாக்கல் செய்வார் என்று சபாநாயகர் ஓம்பிர்லா அறிவித்தார்.

அதன்படி மதியம் 1 மணிக்கு பாராளுமன்ற கூடியதும் வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை மத்திய மந்திரி கிரன்ரிஜ்ஜூ தாக்கல் செய்தார். அதன் மீது காங்கிரஸ் எம்.பி. வேணுகோபால் பேசினார். அப்போது சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகையில், 'எதிர்க்கட்சிகளின் உணர்வு குறித்து மக்களவை அலுவல் ஆய்வுக்குழு முடிவு செய்யும். மசோதா அறிமுகப்படுத்தப்பட்டாலும் அதை நிறைவேற்ற அழுத்தம் கொடுக்கப்படாது' என்று தெரிவித்தன.

வள்ளியூர் அருகே

தனியார் பள்ளியில் மாணவர்கள் மோதல்; 6 பேர் கைது

இன்ஸ்பெக்டரின் மகனும் சிக்கினார்

நெல்லை, ஆக. 8–

நெல்லை மாவட்டம் வள்ளியூர் அருகே தனியார் மெட்ரிக் பள்ளி உள்ளது. நேற்று முன்தினம் மாணவர் பேரவை தலைவர் தேர்வு செய்யும் தேர்தல் பள்ளியில் நடைபெற்றது.

அப்போது மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டது. இதில் ஒரு மாணவர் தாக்கப்பட்டார். பள்ளி நிர்வாகம் முதலில் தகராறில் ஈடுபட்ட மற்றும் தகராறில் காயமடைந்த மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து சமரசம் செய்தது.

ஆனால் பாதிக்கப்பட்ட மாணவர் வள்ளியூர் போலீசில் புகார் செய்தார். இதையடுத்து வள்ளியூர் போலீசார் 7 மாணவர்கள் மீது நேற்று வழக்குப்பதிவு செய்தனர்.

அதில் 6 மாணவர்களை நெல்லையில் உள்ள அரசு கூர்நோக்கு இல்லத்தில் ஒப்படைத்தனர். தகராறில் ஈடுபட்டதில் தூத்துக்குடி மாவட்டத்தில் பணிபுரியும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின் மகனும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடியில் விபத்து

டிப்பர் லாரி மோதி தனியார் நிறுவன ஊழியர் பலி

தூத்துக்குடி, ஆக.8–

தூத்துக்குடி மேலூர் சங்கரபேரி தமிழ்நாடு ஹவுஸிங் போர்டு குடியிருப்பை சேர்ந்தவர் கார்த்திகேயன் (32). இவர் தூத்துக்குடி புதிய துறைமுகம் பகுதியில் உள்ள தனியார் ஏற்றுமதி நிறுவனத்தில் மேற்பார்வையாளராக வேலை செய்து வந்தார்.

இந்நிலையில் இவர் துறைமுகத்தில் நிலக்கரி யார்டு 3–வது தளத்தில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு நிலக்கரி இறக்குவதற்காக நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் லாரியை திடீரென்று ஓலி எழுப்பாமல் அதன் டிரைவரான வீரவநல்லூர் பகுதியை சேர்ந்த ராஜசேகரன் பின் நோக்கி இயக்கினார்.

இதில் கார்த்திகேயன் மோட்டார் சைக்கிள் மீது டிப்பர் லாரி மோதியது. இதில் உடல் நசுங்கி பலத்த காயம் அடைந்த கார்த்திகேயனை மீட்டு தூத்துக்குடி தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் சிகிக்சை பலனின்றி அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து தெர்மல்நகர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சேசபாஜின்சி வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

தென்காசி அருகே

கார் கவிழ்ந்து 5 பேர் காயம்

குற்றாலத்திற்கு குளிக்க வந்தபோது விபத்து

தென்காசி, ஆக. 8–

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையை சேர்ந்த நண்பர்களான முருகன் (வயது 27), பாலாஜி, மனோஜ், கருப்பசாமி, கிருஷ்ணமூர்த்தி ஆகிய 5 பேரும் குற்றாலம் அருவிகளில் குளிப்பதற்காக காரில் வந்துள்ளனர். காரை முருகன் ஓட்டி வந்துள்ளார்.

தென்காசி அருகே உள்ள குத்துக்கல்வலசை பகுதியில் கார் சென்று கொண்டிருந்தபோது திடீரென சாலையின் குறுக்கே நாய் சென்றதாகவும், அதன் மீது ஏற்றாமல் இருப்பதற்காக காரை முருகன் திருப்ப முயன்றதாகவும் கூறப்படுகிறது. இதனால் திடீரென கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது.

சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து கிடக்கும் கார்.

இதில் 5 பேரும் காருக்குள் சிக்கிக் கொண்டனர். உடனடியாக அருகில் இருந்த பொதுமக்கள் காயங்களுடன் இருந்த வர்களை மீட்டு தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

அங்கு கிருஷ்ணமூர்த்தி என்பவர் மட்டும் மேல் சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். கார் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்தில் சிக்கிய சம்பவத்தில் 5 பேரும் அதிர்ஷ்டவசமாக காயங்களுடன் உயிர் தப்பிய நிலையில், விபத்து குறித்து தென்காசி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பூதப்பாண்டி அருகே

ரூ.6 லட்சம் பண மோசடி; தூத்துக்குடி தம்பதி கைது

பூதப்பாண்டி, ஆக.8–

குமரி மாவட்டம் பூதப்பாண்டி அருகே உள்ள திடல் பகுதியை சேர்ந்தவர் ராஜகோபால்(வயது37). இவர் கிராம நிர்வாக அலுவலர் வேலைக்காக தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த செலின் சரத்ராஜ், அவரது மனைவி மஞ்சுவிடம் ரூ.6 லட்சம் பணம் கொடுத்துள்ளார். ஆனால் அவர்கள் கூறியபடி வேலை வாங்கி தரவில்லை.

மேலும் ராஜகோபாலிடம் வாங்கிய பணத்தையும் திருப்பிதராமல் இருந்துள்ளனர். இது குறித்து சரத்ராஜ் மற்றும் அவரது மனைவி மீது பூதப்பாண்டி போலீசில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில் போலீசார், கணவன்– மனைவி ஆகிய இருவரின் மீதும் வழக்கு பதிவு செய்தனர். இதையடுத்து அவர்கள் இருவரும் தலைமறைவாகினர்.

இதனையடுத்து அவர்களை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டது. சரத்ராஜ் மற்றும் அவரது மனைவியை தனிப்படை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர். இந்நிலையில் நீலகிரி மாவட்டம் ஊட்டியில் பதுக்கியிருந்த இருவரையும் தனிப்படை போலீசார் கைது செய்தனர். பின்பு இருவரும் பூதப்பாண்டி போலீஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பண மோசடி தொடர்பாக இருவரிடமும் விசாரணை நடத்தப்பட்டது. பின்பு இருவரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

தென்காசி உழவர் சந்தையில்

ரூ.100-க்கு காய்கறிகள் வாங்கினால் 1 கிலோ தக்காளி இலவசம்

இன்று ஒருநாள் அதிரடி சலுகை

தென்காசி, ஆக.8–

தென்காசி புதிய பஸ் நிலையத்தில் இருந்து குத்துக்கல்வலசை செல்லும் சாலையில் உழவர் சந்தை இயங்கி வருகிறது.

இங்கு விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களை நேரடியாக உழவர் சந்தைகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் தென்காசி மாவட்டத்தில் தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளதால் அதன் விலையும் கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கு இன்று ஒரு நாள் மட்டும் தென்காசி உழவர் சந்தையில் ரூ.100–க்கு காய்கறிகள் வாங்கினால் 1 கிலோ தக்காளி இலவசம் என்கிற அதிரடி சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இதனை அறிந்து பொது மக்கள் பலரும் அங்கு விரைந்து சென்று காய்கறிகளை வாங்கிக்கொண்டு தக்காளியை இலவசமாக பெற்று செல்கின்றனர்.

மேலப்பாளையத்தில்

தொழிலாளி திடீர் சாவு

நெல்லை, ஆக. 8–

மேலப்பாளையம் ஆமீன்புரம் 4–வது தெருவை சேர்ந்தவர் மைதீன் (வயது 47). கூலித்தொழிலாளி. இவருக்கு மனைவி, ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர்.

இவர் சம்பவத்தன்று விளம்பர பலகை பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவருக்கு திடீரென உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளது. உடனே அவரை சக தொழிலாளர்கள் மீட்டு சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று நள்ளிரவு மைதீன் பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து மேலப்பாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதன்மை கல்வி அலுவலகத்தில் இந்து முன்னணியினர் புகார் மனு

நெல்லை, ஆக. 8–

இந்து முன்னணி நெல்லை மாநகர் மாவட்ட செயலாளர் சங்கர் தலைமையில் ஏராளமான நிர்வாகிகள் இன்று நெல்லை மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்திற்கு வந்து அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:–

நெல்லை மாவட்டத்தில் ஏராளமான சிறுபான்மையினர் பள்ளிகள் உள்ளன. இந்த பள்ளிகளில் படிக்கும் இந்து மாணவ–மாணவிகளின் அடையாளங்களை அங்கு பணியாற்றி வரும் ஆசிரியர்கள் அழித்து வருகின்றனர். சாதி ரீதியிலான அடையாளங்களை அழிப்பதற்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ள நிலையில் சாதி கயிறுக்கும், கோவிலில் விரதம் இருப்பதற்காக கட்டும் கயிறுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

மேலும் பள்ளிகளில் படிக்கும் இந்து மாணவிகள் பொட்டு வைக்க கூடாது, பூ வைக்க கூடாது, கழுத்தில் ருத்ராட்சம் அணியக்கூடாது என பல்வேறு நிபந்தனைகள் விதித்து மற்ற மாணவர்களுக்கும் இவர்களுக்கும் இடையே பாரபட்சம் காட்டுகின்றனர். எனவே இது போன்ற செயலில் ஈடுபடும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தனர்.

முன்னாள் முதல்–அமைச்சர் கருணாநிதியின் நினைவு தினத்தையொட்டி நெல்லை சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு டி.ஏ.கே.எம். கொம்பையா பாண்டியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் நிர்வாகிகள் விநாயகம், ஆர்.பி.எல். ராமச்சந்திரன் மற்றும் ராஜாசிங் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

TAMIL NADU WOMEN EMPLOYMENT AND SAFETY PROJECT

RECRUITMENT OF STAFF ON A CONTRACTUAL BASIS

Roc.No.376/ADMIN/2024 Dated: 06.08.2024

The Special Programme Implementation Department of the Government of Tamil Nadu's World Bank – funded Tamil Nadu Women Employment and Safety project (TNWeSafe) has opened positions for its State Project Management Unit for Senior Management and Entry - Level Positions. Candidates may obtain further information and application from **www.tnskill.tn.gov.in**. The last date for submission of applications is on or before 21.08.2024.

DIPR / 825/ Display/2024 **Project Director**

விடிஎம் லிமிடெட்

பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர் CIN No.: L17111TN1946PLC003270

30.06-2024 வரை முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கை Ind AS படி (ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	30.6.2024 அன்று முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது)	சென்ற 31.3.2024 அன்று முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்பட்டது)	30.06.2023 அன்று முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது)	31.3.2024 ஆண்டு முடிவு (தணிக்கை செய்யப்பட்டது)
1	தொழிலில் இருந்து மொத்த வருமானம்	6,050.05	6,528.00	4,877.04	21,527.63
2	அசாதாரண விஷயங்களுக்கு முன்பு லாபம் (வரிக்கு முன்)	873.51	374.83	645.80	2,346.10
3	அசாதாரண விஷயங்களுக்கு பின்பு லாபம் (வரிக்கு முன்)	873.51	374.83	645.80	2,346.10
4	அசாதாரண விஷயங்களுக்கு பின் லாபம் (வரிக்கு பின்)	641.21	352.47	512.07	1,829.19
5	இதர மொத்த வருமானம் (வரி உள்பட)	91.36	25.30	101.97	332.94
6	மொத்த வருமானம்	732.57	377.77	614.04	2,162.13
7	செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்கு மூலதனம் பங்கு முகமதிப்பு (ரூபாயில்)	402.28	402.28	402.28	402.28
8	முந்தைய ஆண்டின் இருப்புநிலைக்குறிப்பில் காட்டப்பட்ட மற்ற ஈக்விட்டி	NA	25,898.83	NA	25,898.83
9	அசாதாரண விஷயங்களுக்கு முன் ஒரு பங்கு பத்திரத்திற்கு (ரூபாயில்) பேசிக்	1.59	0.88	1.27	4.55
	டைலூட்டட்	1.59	0.88	1.27	4.55

குறிப்பு:

1. மேற்குறிப்பிட்ட 30.6.2024 வரை முடிவடைந்த காலாண்டிற்கான நிதிநிலை அறிக்கை தணிக்கை குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டு 07.8.24 அன்று நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. மேற்கூறிய முடிவுகள் கம்பெனிகள் (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS) படியும். கம்பெனிகள் சட்டம் பிரிவு 133-ன் படியும் தயாரிக்கப்பட்டுள்ளது.
3. தணிக்கை செய்யப்படாத காலாண்டு முடிவுகள். SEBI (LODR) 2015 விதிகள் 33ன் படி பங்கு பரிவர்த்தனை மையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த முழு விரிவாக்கம் BSE-ன் இணையதள முகவரி www.bseindia.com மற்றும் கம்பெனி இணையதள முகவரி www.vtmill.com-யிலும் காணலாம்.

இடம்: கப்பலூர், மதுரை
தேதி: 07.08.2024

விடிஎம் லிமிடெட்டிற்காக,
க.தியாகராசன் - இயக்குநர்

தமிழ்நாடு அரசு – பேரூராட்சிகள் துறை

நடுவட்டம் (தேர்வுநிலை) பேரூராட்சி – நீலகிரி மாவட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டத்தில் நடுவட்டம் தேர்வுநிலை பேரூராட்சியில் 2024–2025ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு (TURIP) திட்டத்தின் கீழ், கீழ்கண்ட பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

TAMIL NADU URBAN ROADS INFRASTRUCTURE PROJECT (TURIP) - 2024-2025 (TWO COVER SYSTEM)

வ. எண்.	வேலையின் பெயர்	மதிப்பீடு ரூ.இலட்சத்தில்	முன்வைப்புத் தொகை–ரூ. (online payment)	ஒப்பந்ததாரர் தகுதி
1	Providing Paver Block road at 1. Ooty Gudalur Road to Primary Health Centre, 2. Ooty Gudalur Road to Naduvattam Town Panchayat Office, 3. Naduvattam Town Panchayat Office to Panchayat Colony, 4. T. R Bazaar – Belview – Terrace Road, 5. Mettuchery Road and 6. Ooty Gudalur Road to Ossington Road of Naduvattam town a Panchayat.	90.00	90000/-	Class I

1. நடுவட்டம் தேர்வுநிலை பேரூராட்சியில் மேற்காணும் பணி மேற்கொள்ள செயல் அலுவலரால் தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தபுள்ளி தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
2. பணி ரூ.90.00 இலட்சம் மதிப்புள்ளது
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
4. கொடுவனை நேரம் மற்றும் நாள்

அ. ஒப்பந்த நமூனா இறக்கம் செய்தல் : 05.08.2024 மாலை 05.00 மணி முதல் 21.08.2024 மாலை 3.00 மணி வரை
ஆ. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 21.08.2024 மாலை 3.00 மணி வரை
இ. ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் : 21.08.2024 மாலை 4.00 மணி

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

செ.ம.தொ.இ/2860/ஒப்பந்தப்புள்ளி/2024

செயல் அலுவலர், நடுவட்டம் (தேர்வுநிலை) பேரூராட்சி, நீலகிரி மாவட்டம்

சீராப்பள்ளி (முதல் நிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை

ந.க.எண்.23/2024 நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் (NSMT) : 2024–2025 நாள்.30.07.2024

வ.எண்	வேலையின் பெயர்:
1	வாடு எண்.1 ஆத்தூர் மெயின் ரோடு வேபிரிட்ஜ் பின்புறம் தங்கராஜ் வீடு முதல் வந்தாம் வீடு வரை, வாடு எண்.3 கல்பா தெரு ஆத்தூர் மெயின் ரோடு முரளி வீடு முதல் காசி வீடு வரை போயர் தெரு வேணுகோபால் வீடு முதல் பேக்கரார் வீடு வரை, வாடு எண்.4 செல்வராஜ் வீடு முதல் பாக்கியம் வீடு வரை, சண்முகம் வீடு முதல் புரோக்கர் சண்முகம் வீடு வரை, சண்முகம் வீடு முதல் நாராயணனாயி வீடு வரை, மணி கெட்டியார் வீடு முதல் காசிநாதன் பட்டறை வரை, மணி கெட்டியார் வீடு முதல் நல்லதம்பி வீடு வரை, ஏகாம்பரம் வீடு முதல் சி.எஸ் கப்பாபணி வீடு வரை, தங்கராஜ் வீடு முதல் தொட்டசெமி வீடு வரை, தமிழரசன் லால் மில் முதல் கலிவ கடை வரை, சுதாகர் வீடு முதல் பாலகுரல் வீடு வரை, ஆத்தூர் மெயின் ரோடு முதல் சங்கையன் கோவில் வரை, வாடு எண்.6 வரந்தன் வீடு முதல் ஊ.ஒ.நடுநிலை வரை, முருகேசன் வீடு வரை, விஜயா வீடு முதல் மலர் வீடு வரை, வாடு எண்.10 டீ.வைக்காரி அம்மன் கோவில் முதல் காளியம்மன் கோவில் முதல் சேமபி வீடு வரை, ஏ.சி பழனிசாமி வீடு முதல் மெயின் ரோடு விநாயகர் கோவில் வரை, விஜயன் வீடு முதல் கந்தராஜன் வீடு வரை, வாடு எண்.8 பெரியசாமி வீடு முதல் முருகேசன் வீடு வரை, விஜயா வீடு முதல் மலர் வீடு வரை, வாடு எண்.10 டீ.வைக்காரி அம்மன் கோவில் முதல் காளியம்மன் கோவில் வரை, தேவஸ்தானம்பூரார் அன்புக்குடில் முதல் ஐயனார் வீடு வரை, வாடு எண்.11 கிழக்கு காலனி ஜெகதாதன் வீடு முதல் ராஜி வீடு வரை, வாடு எண்.12 கைடவீதி ஒடுவன்குறிச்சி சாவடி முதல் சிவக்குமார் வீடு வரை, வாடு எண்.13 ஆசாரி தெரு மாரிமுத்து வீடு முதல் சாரதா வீடு வரை, செட்டியார் தெரு பேட்டையன் கடை முதல் போஸ்ட் ஆபீஸ் வரை, பாலாஜி வீடு முதல் ராஜா வீடு வரை, வாடு எண்.14 தேவேந்திர் தெரு மோகன் வீடு முதல் மாரேஸ் வீடு வரை, தர்பாரடி வீடு முதல் முருகன் வீடு வரை, அப்பு வீடு முதல் வீரப்பா வீடு வரை, கண்ணன் வீடு முதல் கல்லான் வீடு வரை, பெரியசாமி கோவில் முதல் ரே.சென் வீடு வரை, தொதி மணி வீடு முதல் கணேசன் வீடு வரை, கல்லான் வீடு முதல் மாரக்கனி வீடு வரை, ஆள்ளிராணி வீடு முதல் குப்பன் வீடு வரை, ராஜி வீடு முதல் மெயின் ரோடு வரை, மோகன் வீடு முதல் துணையன் வீடு வரை, சங்கர் வீடு முதல் வந்தாம் கடை வரை உள்ள பழுதடைந்த சிமெண்ட் சாலைகளை மேம்பாடு செய்தல்.

i) மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் – 119.00, ii) செலுத்த வேண்டிய தொகை முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் – 1,19,000, iii) . ஒப்பந்ததாரரின் தகுதி – Class – I, iv) . வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) – 6 மாதங்கள்.

சீராப்பள்ளி பேரூராட்சி 2024–25ஆம் ஆண்டு நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் (NSMT) மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover System) கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 16.08.2024ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இணையதளம் வாயிலாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 16.08.2024ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட விபரங்களை சீராப்பள்ளி (முதல் நிலை) பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். 2. https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/2849/ஒப்பந்தப்புள்ளி/2024

(ஒம்) அ.அண்ணாமலை, செயல் அலுவலர், சீராப்பள்ளி பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.

அதிகரட்டி பேரூராட்சி

நீலகிரி மாவட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்: 156/2024 நாள்: 05.08.2024

நீலகிரி மாவட்டம் அதிகரட்டி பேரூராட்சியில் 2024-2025-ம் ஆண்டு **நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புகள் திட்டம் (TURIP)** 2024-2025ன் கீழ் Strengthening of BT Road at Ooranally to Katery Vikkimaram (1.110 KM) in Adigaratty Town Panchayat, Oranally to Katery Vikkimaram - 800.00 M (Surface Drain) Oranally to Katery Vikkimaram - 800.00M (Culvert), Oranally of Katery Vikkimaram - Retaining Wall/Kerb wall Estimat Rs. 122.20 Lakhs கீழ்கண்ட பணிகளுக்கு இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் **21.08.2024**-ம் தேதி மாலை **3.00** மணி வரை மின்னணு ஒப்பந்தப்புள்ளி வாயிலாக செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் வரவேற்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **21.08.2024** ம் தேதி அன்று மாலை 4.00 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் திறக்கப்படும்.

**நகர்புற சாலைகள் உட்கட்டமைப்புகள்